**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**In the Court of Judicial Magistrate at Arakkonam.**

**C.C. 231/12**

**PW: 4 D.W: C.W:**

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : கன்னியப்பன் | Caste | : |
| Father Name | : ஜெயராமன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of The day of .05.06.2018**

*****

அரசுத்தரப்பு முதல் விசாரணை:

நான் காட்டுப்பாக்கத்தில் வசிக்கிறேன். நான் செண்டரிங் வேலை செய்கிறேன். சென்னைக்கு சென்று செய்வேன். பொதுவாக நாங்கள் காட்டுப்பாக்கத்தில் ஆட்டோவில் ஏறி அன்வர்திகான்பேட்டை சென்று அங்கிருந்து ரெயிலில் செல்வோம். ஆஜர் எதிரி பெயர் தெரியவில்லை ஆட்டோ எடுத்து வருவார். சம்பவ தினமான 31.10.2007ம் தேதி வழக்கம்போல் காலை 6.40 மணி அளவில் எங்கள் ஊரைச்சேர்ந்த மணிகண்டன் என்பவருக்கு சொந்தமாக சுமார் 25 நபர்க் செல்லக்கூடிய வேனை ஆஜர் திரி ஓட்டிவந்தார் அதில் நாங்கள் சுமார் 25 பேர் ஏறி வந்தோம். அந்த வேன் அன்வர்த்திகான்பேட்டை அருகே செல்லும்போது வன்னாமோடு வளைவில் திரும்பும்போது பிரேக் அடித்தவுடன் தலைகுப்புற கவிழந்து விட்டது. எனக்கு இடுப்பில் பலத்த உள்காயம் ஏற்பட்டது.அடிப்பட்ட என்னை அரக்கோணம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் பின்பு சென்னை அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள் அங்க இரண்டு நாட்கள் சிகிச்சை எடுத்தேன். 6 மாதங்கள் வரை எனக்கு வலி இருந்தது.அன்று என்னுடன் பயணம் செய்த நபர்களில் சுமார் 10, 15 பேருக்கு அடிப்பட்டது ஒருவர் இறந்துவிட்டார். அதில் ஒரு பெண்மணி இறந்துவிட்டார்.போலிசார் என்னை அரக்கோணத்தில் விசாரித்தார்கள்.

எதிர் தரப்பு கு.வி

எனக்கு அடிப்பட்டது சம்மந்தமாக புகார் கொடுத்தேனா என்றால் அங்கே வந்து எழுதி வாங்கிக்கொண்டார்கள். போலிசார் என்னை அதன்பிறகு விசாரித்து வாக்குமூலம் பெற்றார்களா என்றால் மறுமடியும் விசாரிக்கவில்லை. வண்டியில் வந்த யார் யாருக்கு எந்தெந்த இடத்தில் என்னென்ன காயம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் முடியாது. நாங்கள் அந்த வேனில் ஏறியது தப்புதான் என்றால் இல்லை. பர்மிட் இல்லாத வானத்தில் ஏறியது தப்பு தான் என்றால் தப்பு. எத்தனை பேர் அந்த வண்டியில் ஏறினோம் என்றால் 25 பேர். வழியில் ஆட்களை அந்த வண்டி ஏற்றியதா என்றால் இல்லை. நான் பின்னால் உட்கார்ந்துக்கொண்டு வந்தேன். வாகனத்திற்கு முன்பு வண்டி ஏதாவது வந்ததா என்றால் இல்லை. அந்த ரோடு குறுகலான ரோடு என்றால் 15 அடி தார் ரோடு. அந்த சாலை நல்ல சாலையா குண்டும் குழியுமாக உள்ள சாலையா என்றால் பாதி நன்றாக இருக்கும். விபத்து நடந்த பகுதி குண்டும் குழியுமான சாலையா என்றால் அங்கு நன்றாக தான் இருக்கும். சாட்சிகள் பழனி குப்பன் அந்த சாலை குண்டும் குழியுமான சாலை என்று சாட்சியம் அளித்துள்ளர்கள் அது சரியா தவறா என்றால் தவறு. நான் பின்னால் உட்டகார்ந்துக்கொண்டு இருந்ததால் விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் வண்டி வேகமாக வந்தது எனக்கு தெரியாது. நாங்கள் முறையற்ற வேனில் பயணம் செய்தோம் என்றாலும் அந்த விபத்திற்கு நாங்கள் தான் காரணம் என்றால் பர்மிட் இல்லாத வண்டி ஏன் வந்தது தப்புதான்.